கூரை ஓடுகள்:-
மான் மார்க், தேனீ மார்க்,
புலி மார்க், நாறுனி மார்க்,
செவன ஓடுகள்.
M. T. சோமசுந்தரம் & சன்ஸ்
199, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தந்தி: பாதுகாதேவி
தொலைபேசி: 23845

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1/=

பூச்சாடிகள்
Floor Tiles
கிறில்
(நவீன டிசைன்கள்)
உங்கள் ரசனைக்கேற்றவாறு
தெரிவு செய்துகொள்ளுங்கள்
M. T. Somasundaram & Sons
Ceylon Tiles Merchants
199, Power House Road,
JAFFNA.
Gram: Pathukathevi
Phone: 23845

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு கார்த்திகை மீ 29 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 01 (14-12-1985) UTHAYAN – A LIVELY TAMIL DAILY கதிர்:-18

# வடபகுதிக்கான ரயில் சேவை இடைநிறுத்தம்

## இன்டர்சிற்றியில் குண்டு வெடித்ததன் எதிரொலி

யாழ்ப்பாணம், டிச.14

வடபகுதி ரயில் சேவை மீண்டும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்ற இன்டர்சிற்றியில் குண்டு வெடித்ததை அடுத்தே அரசாங்கம் இந்த முடிவை எடுத்திருக்கிறது.

அனுராதபுரம் வரை மட்டுமே கொழும்பில் இருந்து ஒரே ஒரு ரயில் சேவை நடத்தப்படும்.

இந்த ரயில் மருதானையில் இருந்து காலை 7-10க்கு அனுராதபுரம் புறப்படும்.

அனுராதபுரத்தில் இருந்து பகல் 12-10 க்கு கொழும்பு திரும்பும்.

வியாழக்கிழமை யாழ் நகரில் இருந்து கொழும்பு வந்த இன்டர்சிற்றி ரயில் மருதானை யார்ட்டில் வைத்து குண்டு ஒன்று வெடித்தது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்தே, வடபகுதி ரயில்சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டதாக ரயில்வே நிர்வாகம் அறிவித்தது.

நேற்று கொழும்பில் இருந்து புறப்பட்ட ரயில் அனுராதபுரத்துடன் நிறுத்தப்பட்ட சமயம் வடபகுதி பிரயாணிகள் பஸ்கள் மூலம் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினர்.

அவர்களை வடபகுதிக்கு கொண்டு வருவதற்காக வவுனியாவில் இருந்தே இ. போ. ச. பஸ்கள் அனுராதபுரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு அனுராதபுர டிப்போ பஸ்கள் இச் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை.

## நீர்கொழும்பு மீனவர் ஏழு பேரைக் காணோம்

### மடு புறப்பட்டோர் வீடு திரும்பவில்லை

கொழும்பு, டிச 14

நீர்கொழும்பில் இருந்து ஒரு வானில் மடுவுக்குச் சென்ற ஏழு மீனவர்களுக்கு என்ன நடந்தது?

உயிர்தப்பிவந்த எட்டாவது மீனவர் நீர்கொழும்பு பொலீஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இக்கேள்வி எழும்பியுள்ளது.

ஒரு வானில் எட்டுப் பேரும் மடுத்திருப்பதிக்குச் சென்று இருந்தார்கள். ஆனால் ஒருவர் மட்டுமே நீர்கொழும்புக்குத் திரும்பியுள்ளார்.

வானுக்கும் மற்றைய ஏழு பேருக்கும் என்ன நடந்தது என்பது தெரியாமல் உள்ளது.

இப்பொழுது ஆயுதப் படையினர், மடுப்பகுதியில் தேடுதல் நடத்துகின்றனர்.

### சுபநேரம்

14 - 12 - 1985

சனிக்கிழமை

சுபநேரம்:
3-21முதல் 4-51 வரை

ராகுகாலம்:
9-21 முதல் 10-51 வரை

பரீட்சையில்

## ஆள் மாறாட்டம் செய்பவர்களையும் 'ஆமி' பிடிக்கிறது!

மட்டக்களப்பு டிச 14,

ஜி.சி.ஈ பரீட்சையில் ஆள் மாறாட்டம் செய்தவர் எதிர்பாராத வகையில் ஆயுதப் படையினரிடம் சிக்கிக்கொண்டார்.

மட்டக்களப்பு, செங்கலடி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையில் ஜி.சி.ஈ.பரீட்சை முடிந்து பரீட்சார்த்திகள் வெளியேறிக்கொண்டு இருந்தனர்.

அச்சமயம் வீதியிலே வந்த இராணுவத்தினர் ('ஆமி') பரீட்சார்த்திகளைச் சோதனை இட்டனர் அச்சமயம் தமிழ் மாணவர் ஒருவர் வைத்து இருந்த பரீட்சை அடையாளக் கார்ட்டை ஆயுதப்படையினர் வாங்கிப் பார்த்தனர்.

அதில் அவரின் பெயர் குறிப்பிட்ட ஒன்றாக இருந்தது. ஆட்பதிவுத் திணைக்கள அடையாளக் கார்ட்டைப் பார்த்தனர். அதில் வேறு ஒரு பெயரும் வயதும் என்று இருந்தன. அச்சமயம் தான் இவர் 'குதிரை ஓட்டம்' ஓடிய விஷயம் வெளியானது.

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பின்னர் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஜனாப் எஸ். காரியப்பர் முன்னிலையில் சந்தேக நபர் ஆஜர்செய்யப்பட்டார்.

இரண்டு வார காலம் விளக்கமறியலில் இருக்கும்படி சந்தேகநபருக்கு உத்தரவிடப்பட்டது.

இதே போல் அம்பாறையில் ஆள்மாறாட்டம் செய்த முஸ்லிம் இளைஞர் ஒருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## கண்காணிப்புக் குழு திருமலை விஜயம்

### நாளை மூதூர் செல்ல ஏற்பாடு

திருகோணமலை, டிச.14

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் 3 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு வெள்ளிக்கிழமை திருகோணமலைக்கு வந்தனர்.

நாளை மூதூருக்கு கண்காணிப்புக் குழு செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிகின்றது.

முதல்நாள் (வெள்ளிக்கிழமை) பாதிக்கப்பட்ட 22 பேரின் சாட்சியங்களை கண்காணிப்புக்குழு பதிவு செய்தது.

சம்பூர், சேனையூர், ஆலங்கேணிப் பகுதிகளில் நவம்பரில் அப்பாவி தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்து கண்காணிப்புக் குழு விசாரிக்கின்றது.

கண்காணிப்புக் குழு ஞாயிறு மூதூருக்குச் சென்று சம்பூர்க் கிராமத்தைப் பார்வையிட இருப்பதாகத் தெரிகின்றது.

குழு உறுப்பினர்கள், திருமலை செலன் சீஸ் ஹோட்டலில் தங்கி உள்ளனர்.

இன்டர்சிற்றி குண்டு வெடிப்பு:

## 11 பேர் விசாரணை

கொழும்பு, டிச 14

மருதானையில் வியாழக்கிழமை இடம்பெற்ற இன்டர்சிற்றி குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக ரயில் என்ஜின் சாரதி உட்பட பதினொரு பேர்கள் விசேஷ புலனாய்வுப் பொலீஸாரால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

என்ஜின் சாரதியின் பெயர் கந்தசாமி. ஏனைய பத்துப்பேரில் ஏழுபேர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.

வியாழன் காலை யாழ் நகரில் இருந்து புறப்பட்ட இன்டர்சிற்றி ரயிலில் 700 பிரயாணிகள் கொழும்பு சென்றனர்

கோட்டையில் பிரயாணிகளை இறக்கிவிட்டு பின்னர் மருதானை யார்ட்டுக்கு வந்த சமயத்தில்தான் பெட்டி ஒன்றில் இருந்த குண்டு வெடித்தது.

முச்சந்திமுரளி



அவைக்குத் தமிழ்ப் பெடியங்களைக் கண்டா சோதனை செய்யிற எண்ணம் தானே வரும். சோகினை எழுதிப் போட்டுப் போன பெடியனையும் சோதனை செய்து ஒரு 'றெக்கோட்' அடிச்சுப் போட்டினம் பின்னை!

## யாழ். நகரில் நேற்று ஹர்த்தால், கடையடைப்பு

### இறந்த போராளிகளுக்கு அஞ்சலி

—வலிராஜ்—

யாழ்ப்பாணம், டிச. 14

அரியாலை சம்பவத்தில் மரணமான மூன்று போராளிகளுக்கு மரியாதை செலுத்துமுகமாக யாழ்ப்பாணம் நகரில் நேற்று (வெள்ளிக்கிழமை) ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள் மூடப்பட்டன. இறந்த 3 போராளிகளும் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்.

ஹர்த்தாலைத் தொடர்ந்து நகரில் சன நடமாட்டம் குறைந்திருந்தது: ஒரு சில தனியார் வாகனங்கள் சேவையில் ஈடுபட்டதைக் காணக் கூடியதாக இருந்தது. நண்பகலின் பின்னர் அரச சேவைகளும் ஸ்தம்பித்தன.

கொக்குவில், தாவடி, கோண்டாவில், சுன்னாகம் மற்றும் பல இடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. வாழைகள், தோரணங்கள் வீதிகள் தோறும் கட்டப்பட்டு இருந்தன.

இறந்த போராளிகளுக்கு மரியாதை செலுத்துமுகமாக யாழ். நகரில் குண்டுகள் வெடித்

(4-ம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் அகதிகளுக்கு ஒரே முகாம்

## உதவி அரசாங்க அதிபர்களுக்கு பணிப்பு

யாழ்ப்பாணம், டிச. 14

வவுனியா மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கும் சகல அகதிகளையும் வவுனியா நகருக்குக் கொண்டு வரும்படி உதவி அரசாங்க அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 13 முகாம்களில் சுமார் 1000 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 4000 தமிழ் அகதிகள் உள்ளனர்.

வவுனியா மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர்களை இணைப்பு அதிகாரி பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தன நேற்று வெள்ளிக்கிழமை மாநாடு ஒன்றுக்கு அழைத்து இருந்தார்.

அந்த மாநாட்டில் வைத்தே இணைப்பு அதிகாரி, உதவி அரசாங்க அதிபர்களுக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

வவுனியா நகரில் எல்லாரையும் தங்க வைக்கக்கூடியதான முகாம் ஒன்றை நிறுவக் கூடிய தான இடம் ஒன்றைத் தெரிவு செய்யும் வேலையில் அரச அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

### கடலில் நீந்தி வந்தவர் பற்றி விசாரணை

கொழும்பு, டிச. 14

நடுக் கடலில் படகை விட்டுவிட்டு நீந்தி காலித் துறைமுகம் வந்தடைந்த நெதர்லாந்து வாசியின் வருகை பற்றி விசேஷ புலன் விசாரணைப் பகுதியினர் தீவிர விசாரணை நடத்துகின்றனர்.

மாலைதீவில் இருந்து நெதர்லாந்து வாசி படகு ஒன்றில் வந்தார். படகை நடுக் கடலில் விட்டுவிட்டு எதற்காக நீந்தி கரைக்கு வந்தார் என்ற மர்மம் பற்றியே பொலீஸார் விசாரணை நடத்துகின்றனர்.

மட்டக்களப்பில்

## கண்ணி வெடிகளை ஆயுதப்படை அகற்றியது

மட்டக்களப்பு, டிச. 14

இரகசியத் தகவலை அடுத்து ஆயுதப்படையினர் மட்டக்களப்பில் இரண்டு இடங்களில் கண்ணி வெடிகளை அகற்றினர்.

இது பற்றிக் கூறப்படுவதாவது:- வியாழக்கிழமை மாலை தகவல் ஒன்றை அடுத்து ஆயுதப் படையினர் மட்டக்களப்பு - செங்கலடி பதுளை வீதிக்குச் சென்றனர்.

முதலாம் மதகுக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த 3 சிலிண்டர் கண்ணி வெடிகளை ஆயுதப்படையினர் அகற்றினர். அந்த இடத்தில் வயர், பட்டரிகளும் கண்டு பிடிக்கப்பட்டன.

புதன்கிழமை மாலை மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் முறக்கொட்டாஞ்சேனை பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக கண்ணி வெடி வைக்க இடம்பெற்ற முயற்சியையும் ஆயுதப் படையினர் முறியடித்தனராம்.

தகவல் கிடைத்து அந்த இடத்துக்கு விரைந்து சென்ற ஆயுதப்படையினர், அந்த இடத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட பட்டரிகள், வயர்கள், சைக்கிள் ஒன்று ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

இவை தொடர்பாக ஆயுதப்படையினர் தேடுதல் நடத்தினர். எவரும் கைது செய்யப்படவில்லை.

# இலங்கை அரசமைப்பு தோல்வி கண்டுவிட்டது

## தமிழருக்கு குறைபாடுகள் உண்டு அமெரிக்க மாநாடு தீர்மானம்

வாஷிங்டன், டிச.13

இலங்கையின் தற்போதைய அரசமைப்புச் சட்டம் தோல்வி கண்டுவிட்டது இனி புதிய ஒருஅரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினை குறித்து அமெரிக்காவின் மேரிலாண்ட் பல்கலைக்கழகத்தில் நடந்த மாநாடு ஒன்றில் மேற்கண்ட உடன்பாடு காணப்பட்டது. இம்மாநாடு டிச. 6-ஆம், 7-ஆம் திகதிகளில் நடைபெற்றது.

1948-க்குப் பின்னர் இலங்கைத் தமிழரின் பொருளாதார நிலைமை சீர்கெட்டு விட்டது. தமிழருக்கும் நியாயமான குறைபாடுகள் உண்டு-இப்படி மாநாட்டில் ஏகமனதாக உடன்பாடு காணப்பட்டது.

இந்த மாநாட்டில் அறிஞர்கள், நிர்வாக நிபுணர்கள், அமெரிக்க வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகள், சிங்களப் பேராசிரியர் கே.எம்.டி.சில்வா உட்பட பல சிங்களப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மேற்கண்ட இரண்டு விடயங்களிலும், கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மத்தியில் பொதுவான உடன்பாடுகாணப்பட்டது குறிப்பிடத் தக்கது.

இம்மாநாட்டில் அமெரிக்க வெளிநாட்டமைச்சு அதிகாரி திரு.ஜோன்மக்டொனல்ட் கலந்து கொண்டது முக்கியமானது. திரு. மக்டொனல்ட் சொன்னதாவது:

சர்வதேச அரசியலில் இரண்டுவித இராஜதந்திரம் உண்டு.

ஒன்று, அரசுடன் இன்னொரு அரசு நேரடியாகப் பேசுவது,

இரண்டு, உத்தியோகப் பற்றற்ற ரீதியில் பேசுவது.

இலங்கை இனப்பிரச்சினையில் இதுவரை அரசாங்கங்களுக்குஇடையே தான் பேச்சுக்கள் நடந்தன.

இரண்டாவதுரகஇராஜதந்திரத்தைக் கடைப்பிடிக்க காலம் வந்துள்ளது.

உத்தியோகப்பற்றற்ற

(4-ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக் கழக தெரிவு என்ன அடிப்படையில்?

## நாடாளுமன்றத்தில் சரத் கேள்வி

கொழும்பு, டிச. 14

மாவட்ட ரீதியில் பல்கலைகழகங்களுக்கு மாணவர் தெரிவு செய்யும் முறை பற்றி ஒன்றுமே தெரியாது உள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 202 புள்ளிகள் பெற்றவர்கள் தெரிவாகின்றார்கள்.

இரத்தினபுரியில் 211 புள்ளிகளும் மொனறாகலையில் இருந்து 210 புள்ளிகளும் மாத்தறையில் இருந்து 220 புள்ளிகளும் பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் 220 புள்ளிகள் பெற்றவர்களுக்குத்தான் பல்கலைக் கழக அனுமதி கிடைக்கின்றது.

இப்படி கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம நாடாளுமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நேற்று நடந்த உயர் கல்வி அமைச்சின் குழுநிலை விவாதத்தின்போது திரு. சரத் முத்தெட்டுவேகம பேசினார்.

அவர் மேலும் பேசியதாவது:-

மாணவர் பல்கலைக் கழகம் போகும் முன்னரும் அடி வாங்குகின்றனர், பல்கலைக் கழகம் பிரவேசித்த பின்னரும் அடி வாங்குகின்றனர்.

அக்குவைனஸ் உயர் கல்வி நிலையத்தை மூடிவிட்டு, அதன் கட்டடத்தை இராணுவத்திடம் கையளிக்க முயற்சி நடைபெறுவதாக அறிகின்

(4-ஆம் பக்கம் பார்க்க)

குண்டுகள் வெடிக்க

## பீதியால் ஓடிய பெண் மினி வானிற்குப் பலி!

நல்லூர், டிச. 14

நேற்றுக்காலை யாழ். நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களின் போது பீதியால் பாதுகாப்புத் தேடி ஓடிய இளம் ஒருவர் மினி வானில் மோதுண்டு மரணமானார். அவரின் தாயார் காயம் அடைந்தார்.

மானிப்பாயைச் சேர்ந்த திருநாவுக்கரசு விமலாதேவி (வயது 18) என்ற பெண்ணே மரணமானவர் ஆவார்.

அவரின் தாயார் சிவலட்சுமி (வயது 43) காயமடைந்தார்.

மகளின் மரண விசாரணையை யாழ். பதில் நீதவானும் மரண விசாரணை அதிகாரியுமான திரு. ஏ. அன்ரனி நடத்தினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அன்று பாடலாசிரியர் இன்று வெற்றி இயக்குநர்

வெற்றிப்படமான ''ஜனனி''யை இயக்கியவர் நேதாஜி. இவர் ஒரு வித்தியாசமான இளைஞர். பழகுவதற்கு இனியவர்.

ஜெமினி தயாரித்த ''ஜனனி''யை இயக்கியவர் இவர் என்றால் சொல்லவும் வேண்டுமா?

இயக்குநர் நேதாஜி திரையுலகிற்கு அறிமுகமானதே ஒரு பாடலின் மூலம்தான். அந்தப் பாடல் என்ன தெரியுமா? எல்லோரும் அன்று முணு முணுக்த ''ஞாயிறு ஒளி மழையில் திங்கள் குளிக்க வந்தாள்'' என்பதே.

இவர் இந்தப் பாடலை நெருக்கடி நிலையின் போது சிறையிலிருந்த சமயம் எழுதினார். பாடல் பிரபலமானது.

அதைத் தொடர்ந்து 'கன்னிப் பருவத்திலே' படத்தில் ''நடையை மாத்து'' மனிதரில் இத்தனை நிறங்களா? படத்தில் ''மாமா மனசு இனிக்கு நல்லால்ல'' தேவதை படத்தில் ''கலீர், கலீர்'' போன்ற பாடல்களை எழுதினார்.

''உன்னை விடமாட்டேன்'' படத்தில கதாநாயகனாக நடித்ததுடன், இப்படத்தின் மூலம் புதிய இயக்குநராகத் திரையுலகிற்கு அறிமுகமானார்.

இரண்டாவது படம் தான் ''ஜனனி''. இப்படி வேகமாக, திறமையை முன்னிருத்தி உயர்ந்தவர் நேதாஜி.

அவர் தன்னைப்பற்றிக் கூறுகையில் இப்படிச் சொன்னார்:

''அரசியலில் காமராஜரைப் பின்பற்றினேன். சினிமாவில் யாருடைய பாணியையும் பின்பற்றவில்லை. சுருக்கமாகச் சொன்னால் சினிமாவுக்கு வரவேண்டும் என்று எண்ணியதே கிடையாது.

நான் யாருக்கும் குறைவானவனோ, உயர்வானவனோ அல்ல. என் பலமும் பலவீனமும் எனக்குத் தெரியும்'' என்றார்.

தினசரி சினிமா

# இந்தியா ஆய்வு

## அபாயகரமான இரசாயன தொழிற்சாலைகள் பற்றி

புதுடில்லி, டிச. 13

அபாயகரமான இரசாயனப் பொருள்களை உபயோகப் படுத்தும் தொழிற்சாலைகள் பற்றி ஆராய்வதற்கு, இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த ஆண்டு இறுதியில் இடம்பெற்ற போபால் வாயுக்கசிவு போன்ற இன்னொரு சம்பவம் இடம் பெறாது பார்த்துக் கொள்ளவே இந்த நடவடிக்கை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் அமைச்சர் திரு. தங்கத்துரி அஞ்சையா நாடாளுமன்றத்தில் இத்தகவலை வெளியிட்டார்.

இரசாயனத் தொழிற்சாலைகளில்சரியானபாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் என்பதை மாநில அரசுகள் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்று மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப்பட உள்ளன.

22 மாநில முதலமைச்சர்கள் அடங்கிய மாநாடு ஒன்றும் இதற்காகக் கூட்டப்படவுள்ளது.

அணு ஆயுத விவகாரம்

# இஸ்ரவேலுக்கு எதிராக கண்டனத் தீர்மானம்

## ஐ. நா. பொதுச்சபை ஆதரவு

புதுடில்லி டிச 13,

அணுவாயுதங்களைக் கைவிட தொடர்ந்து மறுத்து வரும் இஸ்ரவேலுக்கெதிரான கண்டனத் தீர்மானம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் ஆதரவைப் பெற்றுள்ளது.

பலவகையிலும் இஸ்ரவேல் வழிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அதற்காக ஒற்றுமை நன்கு வலுவடைய வேண்டுமெனவும் பொதுச்சபை கேட்டுள்ளது.

அரபு நாடுகளின் ஆதரவில் கொண்டுவரப்பட்ட அந்தத் தீர்மானத்தில் இஸ்ரவேலின் போக்குகள் கடுமையாகக் கண்டிக்கப்பட்டன.

இஸ்ரவேலில் இருக்கும் அணு சக்தி நிலையங்களை சர்வதேச அணு சக்தி நிறுவனம் முழு அளவில் பார்வையிட இஸ்ரவேல் மறுத்து வருகிறது.

இந்தப் போக்குப்பற்றி அரபு நாடுகள் பெருமளவில் கவலை கொண்டிருப்பதாகவும் அந்தத் தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இஸ்ரவேலுக்கும் தென். ஆபிரிக்காவுக்கும் இடையே தொடர்ந்து நீடித்து வரும் அணு சக்தித்துறை ஒத்துழைப்புக்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து மற்றைய நாடுகளும் ஸ்தாபனங்களும் பந்தோபஸ்து சபையும் தீவிர அக்கறை கொள்ள வேண்டுமென அந்தத் தீர்மானம் மேலும் வற்புறுத்தியுள்ளது.

# ஐ. நா. வில் நீதி ஜனநாயகம் கிடையாது

## கடாபி குற்றச்சாட்டு

அக்ரா, டிச.13

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் நீதியும் ஜனநாயகமும் கிடையா.

இப்படி லிபியா நாட்டுத்தலைவர் கேணல்முவாமர் கடாபி குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில பெரும்பான்மையான நாடுகள் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினாலும் கூட அதைத் தூக்கி எறியும் சக்தி 5 நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்க விடுதலைப் போராட்டம் ஐக்கிய நாடுகள் சபைக்குள் கொண்டு வரப்படவேண்டும்.

சில நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டோ அதிகாரத்துக்கு எதிராக இப்போராட்டம் திருப்பி விடப்பட வேண்டும்—

இப்படி லிபியத் தலைவர் கடாபி கூறினார்.

''அநீதியை எதிர்த்துப் போராடுவோம். எமது பிரேரணைகளை ஐ. நா. நிராகரிக்குமானால் அவர்களே ஐ. நா. சபையை எடுத்துக் கொள்ளட்டும்.

''சிறிய நாடுகள் ஒன்று சேர்ந்து தனி சர்வதேச அமைப்பு ஒன்றை நிறுவுவோம்''—என்றும் லிபியத் தலைவர் கடாபி சொன்னார்.

# யுனெஸ்கோ நிறுவனத்தில் ஆட் குறைப்பு

பாரிஸ், டிச 11

யுனெஸ்கோ ஸ்தாபனத்தில் ஆட்குறைப்பு இடம்பெற இருக்கின்றது.

பிரிட்டன் யுனெஸ்கோவில் இருந்து விலகிக் கொண்டதைத் தொடர்ந்தே இந்த நிலைமை ஏற்பட்டது.

தற்சமயம் வேலைபார்ப்பவர்களில் 800 பேர்வரை வேலை இழக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

ஆட்குறைப்பு நடவடிக்கைக்கு ஆட்சேபம் தெரிவிக்க யுனெஸ்கோ ஊழியர்கள் முன்வந்துள்ளனர்.

அமெரிக்கா கடந்த ஆண்டு யுனெஸ்கோவில் இருந்து விலகிக் கொண்ட சமயம், யுனெஸ்கோவின் வரவு செலவுத் திட்டத்தில் 25சத விதம் வெட்டப்பட்டது.

550 பேர் வேலையும் இழந்தனர்.

## வெளி உலகில்

# வெளிநாட்டவர் குடியேறுவதற்கு கனடா அனுமதிக்கும்

ரொறண்டோ, டிச 13

1986 ஆம் ஆண்டில் வெளிநாட்டவர் அதிகமாக வந்து குடியேற கனடா அரசாங்கம் அனுமதி வழங்கி உள்ளது.

1986 இல் மேலதிக 25,000 வெளிநாட்டவர் வந்து குடியேறலாம் என்று கனடாவின் குடிவரவு அமைச்சர் வால்டர் மக்லீன் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

ஆண்டுதோறும் 90 ஆயிரத்தில் இருந்து 1 லட்சத்து 15 ஆயிரம் வெளிநாட்டவர் வரை கனடா தற்சமயம் அனுமதித்து வருகிறது.

''வெளிநாட்டவர் வந்து கனடா மக்களின் தொழில் வாய்ப்புக்களை எடுக்கவில்லை. அதற்குப் பதில் அவர்கள் எமது நாட்டில் பொருளாதார சமூக அபிவிருத்திக்கு உழைக்கின்றார்கள்'' இப்படி அமைச்சர் சொன்னார்.

கனடா நாட்டில் உதவி பெறும் அகதிகள் தொகையும் ஆயிரத்தினால் அதிகரிக்கப்படவுள்ளது.

1985 இல் 11,000 பேர் இந்த முறையில் அனுமதிக்கப்பட்டனர். 1986 இல் 12,000 ஆக இத்தொகை அதிகரிக்கப்படவுள்ளது.

மனிதாபிமான அடிப்படையில் 1986 இல் 20 ஆயிரம் முதல் 23'000 வரை வெளிநாட்டவர் கனடாவிற்குள் வர அனுமதிக்கப்படுவர்.

கனடா வந்துள்ள ஒரு வெளிநாட்டவர், குடும்பத்தைக் கொண்டுவர அவராக விண்ணப்பிக்க வேண்டிய தேவையில்லை.

அவரின் குடும்ப உறுப்பினர்களே விண்ணப்பிக்க முடியும்.

# வடமராட்சியில் எரிபொருள் தட்டுப்பாடு

நாகர்கோவில், டிச 14

வடமராட்சிப் பகுதி எரிபொருள் விற்பனையின் ஏகபோக உரிமை புலோலி ப. நோ. கூ. சங்கத்திற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை.

இதனால் இப்பகுதிப் பாவனையாளர்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றார்கள்.

இங்கு தெருவிற்குத் தெரு அங்காடி வியாபாரிகள் எரிபொருளை அதிக விலைக்கு விற்பனை செய்துவருகிறார்கள்.

மேலும் வடமராட்சிப் பகுதிக் கமக்காரர்கள் தமக்குத் தேவையான மண்ணெண்ணெய்யை கள்ள மார்க்கெட்டிலேயே கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது.

# முகாமில் இல்லாத அரச ஊழியர்களுக்கு விசேஷ லீவு இல்லை

யாழ்ப்பாணம், டிச 14

அகதி முகாம்களில் தங்கியிராத அரச ஊழியர்களுக்கு விசேஷ லீவு வழங்கப்பட மாட்டாது.

பொது நிர்வாகத் திணைக்களம் இடம் பெயர்ந்த ஊழியர் இணைப்புக் குழுவுக்கு அனுப்பிய கடிதத்தில் இத்தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இம்முடிவைப் புனராலோசனை செய்யும்படி இடம்பெயர்ந்த ஊழியர் இணைப்புக்குழு அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

''தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள மூன்று அகதிகள் முகாம்களில் சுமார் 1500 பேர் மட்டுமே உள்ளனர்.

ஆனால் இடம் பெயர்ந்த அரச ஊழியர்களில் பெரும்பாலானோர் தத்தம் வீடுகளிலும், உறவினர் நண்பர்களுடனும் வசித்து வருகின்றனர்.

அத்துடன் இவர்களுக்குத் தற்போது அரசினால் வழங்கப்படும் நிவாரணம் இம் மாதம் 15ஆம் திகதியுடன் நிறுத்தப்படலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொது நிர்வாகத்துறையின் இம்முடிவு நியாயமற்றது'' என்று இடம் பெயர்ந்த ஊழியர் இணைப்புக் குழுப் பதில் செயலாளர் திரு. டி. குமாரசிங்கம் உதயனிடம் விளக்கிக் கூறினார்.

# திருமலை அகதிகளுக்கு உதவுவதில் தொண்டர் ஸ்தாபனங்கள் சுறுசுறுப்பு

யாழ்ப்பாணம், டிச 14

யாழ் குடாநாட்டில் தஞ்சம் புகுந்துள்ள திருகோணமலை தமிழ் அகதிகளுக்கு உதவிகள் வழங்குவதில் தொண்டர் ஸ்தாபனங்கள் சுறுசுறுப்பாக ஈடுபடுகின்றன.

இந்து விஷ்வபரிஷத் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை வழங்கியுள்ளது.

ஹியுமெடக் தொண்டர் நிறுவனமும் ஊர்காவற்றுறை, கரவெட்டிப்பகுதிகளில் முகாமிட்டுள்ள திருமலை அகதிகளுக்கு துணிமணிகள் அடங்கிய 545 பார்சல்களை வழங்கியது.

தென் இந்திய திருச்சபை யாழ் ஆதீனமும் துணிமணிகள், உணவுப் பொருள்கள் அடங்கிய 700 பார்சல்களை அகதிகளுக்கு வழங்கியது.

இப்படி 5,000 குடும்பங்களுக்கு தொண்டர் ஸ்தாபனங்கள் உதவி அளித்துள்ளன.

தற்சமயம் யாழ் குடாநாட்டில் 5650 குடும்பங்களைச் சேர்ந்த 24,400 பேர்கள் அகதிகளாகத் தஞ்சம் அடைந்து உள்ளனர்.

# கிழிந்த நோட்டுக்களை ஏற்க தயக்கம்

தாளையடி, டிச.14

பழுதடைந்த, கிழிந்து ஒட்டிய பண நோட்டுக்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

இத்தகைய பணநோட்டுக்களை ஏற்க வேண்டாம் என வடபிராந்திய போக்குவரத்துச் சபை, பஸ் நடத்துநர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

# திணைக்கள துணிவகை அபகரிப்பு

மட்டக்களப்பு டிச. 14

குடிசைக் கைத்தொழிற் திணைக்களத்திற்குச் சொந்தமான கைத்தறித் துணிகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று மட்டக்களப்புக்கு அருகில் வைத்து இனந் தெரியாத கோஷ்டி ஒன்றினால் கொள்ளை இடப்பட்டது.

பிள்ளையாரடி என்ற இடத்தில் இச் சம்பவம் வியாழன் பிற்பகல் 2 30 மணி அளவில் நடந்தது.

இந்த லொறி கொழும்பு நோக்கிப் போகும் சமயத்தில்தான் கொள்ளையடிக்கப்பட்டது.

இத் துணிமணிகளின் பெறுமதி 80,000 ரூபா என்று மதிப்பிடப்பட்டு உள்ளது.

# ஐ. தே. க. வருடாந்த மாநாடு

அம்பாறை டிச. 14

ஐக்கிய தேசியக் கட்சியின் 31ஆவது வருடாந்த மாநாடு எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறும்.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# நல்லை ஆதீனத்தில் திருமுறை முற்றோதல்

வட்டுக்கோட்டை, டிச 14

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற விருக்கும் திருமுறை முற்றோதல் விழாவை முன்னிட்டு எதிர்வரும் சித்திரை மாதம் இருபது வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கிடையே தேவார திருவாசக மனனப்போட்டிகள் இரண்டு ஆதீனத்தால் நடத்தப்படவுள்ளன.

தேவாரம், திருவாசகம் ஆகிய இரண்டும் தனித்தனி போட்டிகளாகும். ஒருவர் விரும்பினால் இரண்டுபோட்டிகளிலும் பங்குபற்றலாம். இப்போட்டிகளில் பங்குபற்றி பரிசில் பெறுவோருக்கு தனித்தனி வெள்ளிப்பதக்கங்கள் பரிசிலாக வழங்கப்படும்.

இப்போட்டிகளில்பங்குபற்ற விரும்புவோர் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, பாடசாலை, பங்குபெற்ற விரும்பும் போட்டி ஆகிய விபரங்களைக் கொண்ட விண்ணப்பத்தை 31–01–86க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி விண்ணப்பம் அனுப்ப வேண்டுமென ஆதீனச் செயலர் தெரிவித்துள்ளார்.

அனுப்பவேண்டிய முகவரி: ஆதீன செயலாளர்; நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்; பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.

# மனித உரிமைகள் தினம்

சாவகச்சேரி டிச. 14

அறவழிப் போராட்டக் குழுவினரால் மனித உரிமைகள் தினம் அமைதியான முறையில் துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இக்குழுவினரின் வேண்டுகோளை அடுத்து வியாபார நிலையங்கள், பொது இடங்கள் ஆகியவற்றில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

இளைஞர்கள், யுவதிகள் கறுப்புப்பட்டிகள் அணிந்து சென்றனர்.

செவ்வாய்க்கிழமை சாவகச்சேரியில் சந்தை கூடும் தினமாகையால் அங்கு கூடிய மக்களில் அதிகமானோர் கறுப்புப் பட்டிகளை அணிந்து சென்றதைக் காண முடிந்தது.

# ஸியாவின் மனைவி நாடு திரும்பிய மர்மம் துலங்கியது

கொழும்பு, டிச 14

பாகிஸ்தான் ஜனாதிபதியுடன் இலங்கை வந்த அவரது துணைவியார் ஏன் உடனடியாக பாகிஸ்தான் திரும்பினார் என்பதன் மர்மம் இப்போது வெளியாகியுள்ளது.

காலை 10. 30 மணிக்கு கணவருடன் வந்த பேகம் ஸியா – உல்–ஹக். 11-30 மணிக்கே பாகிஸ்தானுக்கு விமானம் ஏறிவிட்டார்.

அடுத்த வாரம் நடைபெற உள்ள உறவினர் ஒருவரின் திருமணத்துக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவே அவர் உடன் திரும்பினார் என்று இப்பொழுது தெரியவந்துள்ளது.

# கூட்டுறவு இறுதி பரீட்சையில் சித்தி யடைந்தோர்

யாழ்ப்பாணம், டிச.14

யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரியில் 1983 ஆம் ஆண்டில் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு நடத்தப்பட்ட கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர்பிரிவு பயிற்சி நெறிக்கான இறுதிப் பரீட்சையை பொல்கொல கூட்டுறவுக் கல்லூரி 1984-ஆம் ஆண்டு நடத்தியது.

அப்பரீட்சையின் முடிவுகள் இப்போது வெளிவந்துள்ளன.

விபரம் வருமாறு:-

சித்தியடைந்தோர்:- என். கணேசமூர்த்தி, எஸ். தியாகராசா.

நான சித்தி:

ஜீ. இராசலட்சுமி, ரி. வெனிற், சி. சந்திரா, வி. விஜயசிங்கம், என். பாலசுப்பிரமணியம், வி. முனீஸ்வரன், ரி. கனகசபாபதி, ஆர். ஜெயானந்தன், கே.வல்லிபுரம், ஏ. ஜே. பிரிட்ரோஸ், டி. பாலசெங்காதரன், ரி. ஸ்ரீசந்திரராசா, வி. விஜயரத்தினம், என். தில்லைநாதன், கே.வைத்திலிங்கம், என். அமிர்தவல்லி, எஸ். பரமேஸ்வரி, எஸ். அகிலா, கே. ஜெயந்திமாலா, எஸ். உர்ஸலாதேவி, எஸ். பகவதி, வி. பாமா, கே. இந்துமதி.

இப்பரீட்சைக்கு மீண்டும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 1986–ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என்று மேற்படி பரீட்சை முடிவுகளை அனுப்பிய பொல்கொல கூட்டுறவுக் கல்லூரி தெரிவித்துள்ளது.

# நல்லின தென்னை நாற்றுக்கள்

பண்டத்தரிப்பு. டிச 14

குறுகிய காலத்தில் அதிக பயன் தரக்கூடிய திருந்திய இனத்தென்னை நாற்றுகள் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் விற்கப்படுகின்றன.

தெங்குப் பொருள் உற்பத்தியை பெருக்கவும், உள்ளூர் தேங்காய்த் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கிலும் இந்த நல்லின நாற்றுக்களை உதவி அரசாங்க அதிபர் தருவித்துள்ளார்.

புனருத்தாரணப் பணி

# புராதன ஆலயங்களில் தொடரவேண்டும்

## புங்குடுதீவு வீரகத்திப்பிள்ளையார் பரிபாலனசபைக் கூட்டத்தில் உரை

புங்குடுதீவு, டிச. 14

சைவ நன்மக்கள் புதிய ஆலயங்களைத் தோற்றுவிக்காது, புராதன ஆலயங்களைத் தேடிச் சென்று புனரமைக்க வேண்டும்.

மேற்கண்டவாறு தமிழர் கலாசார சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான திரு. எஸ். கே. மகேந்திரன் குறிப்பிட்டார்.

புங்குடுதீவு மடத்துவெளி வீரகத்திப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபைக் கூட்டத்தில் தலைமை தாங்கிப் பேசுகையில் அவர் தொடர்ந்து கூறியதாவது,

ஆலயத் திருப்பணிகள் முக்காலமும் முழுமையாகப் பரிணமிக்கக் கூடிய முறையில் உறுதியாகவும் ஆகம விதிப்படியும் அமைய வேண்டும். விரைவாகச் செய்து விலாசம் எடுக்க வேண்டுமென்ற கருத்து இதில் இருக்கக்கூடாது.

நாவலர் பெருமானின் பிரசங்கங்களால் தான் பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வர புனருத்தாரண திருப்பணி கருக்கொண்டது.

நாவலரின் தூண்டுதலின் பேரிலேயே யாழ்ப்பாண தனவந்தர்கள் திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியை விலைக்கு வாங்கி சைவச் சொத்தாக்கினார்கள்.

இந்த நன்முயற்சித் தொடரில் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் திருப்பணி தொடர்ந்தார்.

ஆக்கம் நிறைந்த அரும் பணியாக அது மலர்ந்தது.

இந்த முன்னுதாரணத்தைக் கைக்கொண்டு பணி புரிதலே சைவ உலகுக்குப் பெருமை சேர்க்கும். பழைய ஆலயங்களைத்தேடிச் சென்று புனருத்தாரணத் திருப்பணிகளை தொடர வேண்டும்.

# கொள்ளை

யாழ்ப்பாணம், டிச 14.

வவுனியாவில் சின்னப் புதுக்குளம் என்னும் இடத்தில் உள்ள வீடு ஒன்றை இனந்தெரியாதவர்கள் கொள்ளையடிக்க எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

அந்த வீடு வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமானது.

வீட்டில் உள்ளோர் கூச்சல் எழுப்ப கொள்ளையடிக்க வந்தவர்கள் ஓடிவிட்டனராம்.

### உதய சங்கற்பம்

எவ்வளவு கஷ்டங்கள் அடுத்தடுத்து வந்தாலும் அவை அனைத்தையும் சகித்துக் கொண்டு இரு. எப்பொழுதும் முயற்சியுடன் இரு. கவலைகளை அறவே ஒழி.

— சுவாமி விவேகானந்தர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073
14-12-85 த. பெ. 23

## கண்ணில் புண் இருக்க காலைத் தடவலாமா?

ஐக்கிய நாடுகள் சாசனத்தில் இருக்கும் மனித உரிமைகளை அங்கீகரித்துள்ள அனைத்து நாடுகளும், சாசனத்தில் உள்ள சுயநிர்ணய உரிமைச் சரத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வியாழக்கிழமை மனித உரிமைகள் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அங்கு பேசிய பேராசிரியர் கா. சிவத்தம்பி மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

இலங்கை எனும் இந்த நாடு இன்று பெரும் கஷ்டமான — இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது. அண்மைக் காலச் சரித்திரத்தில் இல்லாத அளவுக்கு அது இப்போது பெரும் நெருக்கடியை அனுபவித்து வருகிறது.

இந்தக் கஷ்டத்துக்கும், நெருக்கடிக்கும் மக்கள் துயருக்கும் மூலகாரணமாக இருப்பது சுயநிர்ணய உரிமை விவகாரம்தான். ஆதலால் பேராசிரியர் சிவத்தம்பி தக்க தருணத்தில் அதுபற்றிய கவனத்தை ஈர்த்திருக்கிறார் என்றே நாம் கருதுகிறோம். அவர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களில் ஒருவர். ஆகையால் அவரது கருத்து அரசாங்கத்தின் கவனத்தையும் ஈர்க்க வேண்டும்.

தமிழ் மக்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள். ஆனால் இப்போது அவர்கள் இரண்டாம் தரப் பிரசைகளாக்கப்பட்டு விட்டனர். வெறும் ஏட்டிலும் எழுத்திலும் சமத்துவம் சொல்லப்படுகிறதே தவிர, நடைமுறையில் அவர்கள் நடைப்பிணங்களாக வாழும் நிலை.

இவ்வாறான இடர் நிலைக்குப் பிரதான காரணம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாமைதான்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தனது தலைவிதியை நிர்ணயிக்க உரிமை உண்டு. அந்த உரிமை எல்லோருக்கும் வேண்டும். அதே போன்று ஒவ்வொரு இனமும் தனது தலைவிதியை நிர்ணயிக்க உரிமை வேண்டும். ஒருவன் தனது விவகாரங்களையும் அலுவல்களையும் தீர்மானிப்பதையும் செயற்படுத்துவதையும் அவனே முடிவு செய்யவேண்டும். மற்றவர்கள் தலையிட நியாயமில்லை. அவ்வாறாயின் ஓர் இனம் தன்னைத்தான் ஆளுவதா வேறு யாரோடும் சேர்ந்திருந்து வாழ்வதா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அவசியம். அதுவே சுயநிர்ணய உரிமை.

இந்த உரிமை ஐக்கிய நாடுகள் மனித அடிப்படை உரிமைகள் சாசனத்தில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை என்ற இந்த நாடும் அந்தச் சாசனத்தில் ஒப்பமிட்டுள்ளது.

ஆனால் என்னே விந்தை! அடிப்படை மனித உரிமைகள் பலவும் கொண்டதுஎன இந்த நாட்டு அரசமைப்புச் சட்டத்தை அரசாங்கத் தலைவர்கள் பெரிதாகப் பீற்றிக் கொள்கிறார்கள். ஆனால் அந்தச் சட்டத்தை பூதக்கண்ணாடி கொண்டு துருவித் துருவிப் பார்த்தாலும் அதில் சுயநிர்ணய உரிமை என்ற அர்த்தம்பட எதிர்மறையாகவேனும் எந்தச் சொற்பதத்தையும் காணோம்.

மத சுதந்திரம், எழுத்துச்சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், கூட்டம் அல்லதுசங்கம் கூடும் சுதந்திரம் எல்லாம் அரசமைப்புச் சட்டத்தில் உள்ளன. அநீதியான கைது, தடுப்புக்காவல், சித்திரவதை ஆகியனவற்றைத் தடுக்கவும் அரசமைப்பு வகைசெய்கிறது. சபாஷ்! ஆனால் சுயநிர்ணய உரிமை பற்றி மூச்சுத்தானும் விடவில்லை அது.

அரசமைப்பை இயற்றும்போதே சிறுபான்மை இனங்களின் சுயநிர்ணய உரிமையை நசுக்க வேண்டும் என்ற உள்நோக்கம் இருந்திருக்கிறது.

இதுவே இன்றைய பெரும் பிரச்சினைக்கும் நெருக்கடிக்கும் ஆணிவேர். இதனை மறந்து திவிரவாதம்தான் இன்றைய பயங்கர நெருக்கடிக்குக் காரணம் என்று காட்ட முயல்வது கண்ணில் புண்ணிருக்க காலைத் தடவியது போலாகும்.

## பொன்னாடை கௌரவம்

நல்லூர், டிச. 14

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் 40 ஆண்டுகளாக ஞாயிறுதோறும் பஜனை நடத்தி வரும் திரு கே. பி. சிவகுருநாதனைப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க, இந்த ஆலய வழிபடுவோர் சபைதீர்மானித்துள்ளது.

இப் பாராட்டு விழாவை இம்மாத இறுதிப் பஜனை தினத்தன்று நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, சபையின் செயலாளர் திரு. கா. சந்திரராஜா தெரிவித்தார்.

பஜனைகளில் அவர் தான் இயற்றிய பாடல்களையே பாடியும் வருகின்றார். அப்பாடல்களை புத்தகமாக அச்சிட்டு வெளியிடவும் சபை தீர்மானித்துள்ளது.

# உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் மாநாடு

## 40 நாடுகளைச் சேர்ந்த 1000 பிரதிநிதிகள் பங்கு

பொன் பூலோகசிங்கம்
இலங்கைப் பிரதிநிதி
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

(உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் மூன்றாவது சர்வதேச மாநாடு தமிழ் நாட்டில் சேலம் மாநகரில்தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

மூன்று தினங்களாகநடைபெறும்இம் மாநாட்டை ஒட்டி இச் சிறப்புக்கட்டுரை பிரசுரமாகின்றது.)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் மூன்றுநாள் மூன்றாவது சர்வதேச மாநாடு இப்போது சேலம் மாநகரில் உள்ள விஜயராகவாச்சாரியார் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்த மாநாட்டில் உலகின் பல பாகங்களிலும் வாழும் 40க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 1000க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள்வந்து கலந்துகொள்கிறார்கள்.

### மாநாட்டின் நோக்கம்

இந்த மாநாட்டின் நோக்கங்கள் குறித்து உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் பின்வரும் முக்கிய அம்சங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவையாவன:-

1. தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட உலகத் தமிழர்களை அந்தந்த நாட்டுக் குடிமக்களாகஆங்காங்கே வாழும் உரிமைகளைப் பேணும்படி ஊக்கமூட்டுதல்.

2 தாய் மொழியை அந்தந்தநாடுகளில பேச, படிக்க, எழுத ஊக்கமூட்டுதல்.

3. ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கைப்படியே மனித உரிமைகளுக்காகப் போராடுதல், சிறுபான்மை இன மக்களின் பண்பாட்டு கலாசார விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்தலும் அவற்றை வளர்த்தலும்.

4. தமிழர் வாழும் நாடுகளில் தமிழ்க்கல்வி, தமிழ்மொழி, தமிழ் நாகரிகம், தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம் முதலியவற்றின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசின் உதவிகளைக் கோருதல்.

5. உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழ்மக்களை ஒருங்கிணைத்து ஒருமைப்பாட்டைப் பேணிப்பாதுகாத்தல்.

### இயக்கத்தின் தோற்றம்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் முதன் முதலாக 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தோற்றுவிக்கப்பட்டது.

அந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வருகை தந்திருந்த உலகின் பல பாகங்களிலும் வாழும் தமிழ் அறிஞர்கள் தமிழ் ஆராய்ச்சியோடு மட்டும் நின்றுவிடாமல் அதற்கப்பாலும் சென்று உலகின் பல பாகங்களிலும் வாழும் தமிழ் மக்களது கலாசாரம், கலை, பண்பாடு போன்ற விழுமியங்கள்அழிந்து சிதைந்து போகாது பேணிப் பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தவர்களாக உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள்.

பேராசிரியர் சாலை இளந்திரையன், மறைந்த தமிழ் அறிஞர் வண. பிதா. தனிநாயகம் அடிகளார், பேராசிரியர் வித்தியானந்தன் போன்ற பெரும் தமிழ் அறிஞர்களின் சீரிய முயற்சியினாலேயே இது சாத்தியமாயிற்று.

இலங்கையின் முதல் அமைப்பு உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து உலகின் பல பாகங்களிலும் பல கிளை ஸ்தாபனங்கள் உருவாக்கப்பட்டன. இந்த இயக்கத்தின் தலைமைச் செயலகம் மலேசியாவில்அமைக்கப்பட்டதோடு மலேசியத் தமிழ் அறிஞர் திரு. வீரப்பன் இந்த அமைப்பிற்குத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

அவர் தாமாகவே உலகின் பல நாடுகளுக்கும் சென்று பல கிளை ஸ்தாபனங்களை உருவாக்கினார். இதனால் இன்று உலகின் பல பாகங்களிலும் 30க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்கள் இருக்கின்றன.

அந்த நாடுகள் வருமாறு:-

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், லண்டன், பிஜி, தென்ஆபிரிக்கா, இந்தோனேசியா, ரியூனியன், பிரான்ஸ், பர்மா, பிலிப்பீன்ஸ், வடஅமெரிக்கா, தாய்லாந்து, புருணை, பப்புவா நியூகினி, ஹொங்கொங், நியூகலிடோனியன், அவுஸ்திரேலியா, ஸாம்பியா, மேற்கு ஜெர்மனி, இத்தாலி, சவூதிஅரேபியா, நோர்வே, சயானா, குவாதலுப், திரினிடாட், சிசெல்ஸ், மாட்னிக் தீவுகள்.

### முன்னைய மாநாடுகள்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் முதலாவது மாநாடு 1977ஆம் ஆண்டு டிசெம்பர்மாதம் சென்னை மாநகரில் தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

1977இல் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தை அடுத்து இந்த மாநாடு அங்கு இடம் பெற்றமையால் மாநாட்டின் பிரதிநிதிகள் பலரும் இலங்கை இனப் பிரச்சினை பற்றியேஉரையாற்றினர், இறுதிநாள் சென்னை பெரியார் திடலில் இடம்பெற்றபொது வைபவம் தமிழக மக்கள் முன்னிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையை முன்வைத்த ஒரு பொதுமேடையாகவும் அமைந்தது.

இரண்டாவது மாநாடு 1980இல் மொரிசியசில் அப்போதைய மொரிசியஸ் உதவிப் பிரதமர் திரு. வீரசாமி ரெங்காடு தலைமையில் நடைபெற்றது. இந்த மாநாட்டின் பெறுபேறாக மொரிசியசில் வாழும் தமிழ்க் குழந்தைகள் தமிழ் மொழியைத் தொடர்ந்து கற்பதற்கு வசதியாகப் பெருந்தொகையான தமிழ்ப் பாடநூல்களை தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி இந்தியத் தூதரகத்தின் ஊடாக மொரிசியசிற்கு அனுப்பி வைத்தார்.

அதைத் தொடர்ந்து உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் மொரிசியஸ் பிரமுகர் தங்கணமுத்து மொரிசியஸ் தமிழ்க்கல்வி அதிகாரி திரு. புஷ்பரதம் தம்பதிகளின் முயற்சியால் உலகின் பல பாகங்களிலுமிருந்து பெருந்தொகையான தமிழ்ப் பாடநூல்கள் மொரிசியசிற்குக் கிடைத்தன. இலங்கைக் கிளையும் அங்கு பெருந்தொகையான நூல்களை அனுப்பி வைத்தது.

### இலங்கையில்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையானது காலத்திற்குக்காலம்மலேசியாவிலுள்ள தலைமைச் செயலகத்தின் ஊடாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டது.

உலகின் பல பாகங்களிலும் வாழும் தமிழர்களது கலை, கலாசார வளர்ச்சிக்காகவும் பண்பாட்டு விழுமியங்கள் சிதைந்து போகாது பேணிப் பாதுகாப்பதற்காகவும் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டது.

1978ஆம் ஆண்டு தென்னாபிரிக்கத் தமிழ்த் தலைவரான திரு. வேங்கடரத்தினத்துக்கு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட சிறைத்தண்டனைக் காலத்திலும் பார்க்க அங்குள்ள நீதியமைச்சரின் உத்தரவின் பேரில் அவரது சிறைத்தண்டனைக்காலம் நீடிக்கப்பட்டபோது இலங்கைக் கிளை இந்த விடயத்தை சர்வதேச மன்னிப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்தது. அத்துடன் நீதி, சுதந்திரத்தில் தலையிடும் தென்னாபிரிக்க நீதி மந்திரியின் நடவடிக்கையைக் கண்டித்து அவருக்கு ஒரு மகஜரை அனுப்பிவைத்தது.

உலகின் பல பாகங்களிலிருந்து இந்த மனித உரிமை மீறலுக்கு எதிராகக் கண்டனங்கள் கிளம்பவே திரு.வேங்கடரத்தினம் விடுதலை பெற்றார்.

அடுத்ததாக, 1981ஆம் ஆண்டு மதுரையில் இடம்பெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்ட எமது இயக்கப் பிரதிநிதிகள் மொரிசியசில் ஒரு தமிழ் அச்சகம் ஒன்றை ஏற்படுத்தி அங்கு தமிழ்ப்

(4-ஆம் பக்கம் பார்க்க)



### பொய்யாமொழி

குறள்:

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

பொருள்:

மழை பெய்யாமற் போகுமானால் இவ்வுலகத்தில் வானோர்க்காக நடக்கும் திருவிழாவும் நடைபெறாது; நாள் வழிபாடும் நடைபெறாது.

# நாகபூஷணி அம்மன் கோயில் புதிய முகாமைத் திட்டம்

## 6 ஆம் திகதி முதல் அமுல்

யாழ்ப்பாணம், டிச 14

ஈழத்தின் தலைசிறந்த சக்தி பீடமாகத் திகழும் நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலுக்கான புதிய முகாமைத் திட்டம் டிசம்பர் ஆறும்திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. பி. பாலவடிவேலு இதற்கான உத்தரவை வழங்கி உள்ளார்.

இதன் பிரகாரம் இது வரை நடைமுறையில் இருந்து வந்த பழைய நிர்வாகத் திட்டம் ரத்துச் செய்யப்பட்டது.

பழைய நிர்வாகத் திட்டம் 1948இல் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டது.

புதிய நிர்வாகத் திட்டம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து உருவாக்கப்பட்டுள்ளது. இது உருவாகுவதற்கு சட்டத்தரணிகளான திரு. செ. கோடீஸ்வரன், திரு. டபிள்யு. எஸ். செந்தில்நாதன் ஆகியோர் வழக்காளிகளின் சார்பிலும், சட்டத்தரணிகள் திரு. இ. ஏகநாதன், செல்வி டி. இராயப்பு ஆகியோர் எதிராளிகள் சார்பிலும் முக்கியபங்கு வகித்தனர்.

புதிய முகாமைத் திட்டத்தின் கீழ் முதலாவது தேர்தலுக்கான அங்கத்தவர் இடாப்புத் தயாரிப்பது, அதன் பிரகாரம் முதலாவது மகாசபைக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து அறங்காவலர்களைத் தெரிவு செய்வது, அறங்காவல் சபையைக் கூட்டி அதன் உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வது — ஆகியவற்றை நிறைவேற்றும் தகுதி வாய்ந்த உத்தியோகத்தராக வேலணை உதவி அரசாங்க அதிபரை ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம் நியமித்துள்ளது.

புதிய முகாமைத் திட்டம் உருவாக முன்னோடியாக இருந்து அரும் பணியாற்றியவா சைலப் பெரியார் திரு. கு. வை. முத்தையா.

ஆலயத்தின் நாற்றுண்டு காலச் சரித்திரத்தில் இடம் பெற்ற மூன்றாவது முகாமைத் திட்டமான இதில் தான் வழிபடுநர் மகாசபை உறுப்பினர்களின் உரிமைகளுக்குச் சட்ட ரீதியாக உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

1897, 1948ஆம் ஆண்டுகளில் நடைமுறைப் படுத்தப்பட்ட நிர்வாகத் திட்டங்களில் வழிபடுநருக்கு வழங்கப்படாத எத்தனையோ உரிமைகள் புதிய திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.

12 பேரை அறங்காவலராகக் கொண்டு இது வரை இருந்து வந்த நால்வர் பரம்பரையே தொடர்ந்தும் பரம்பரை அறங்காவலராக இருக்கும்.

# வவுனியா அகதிகள் நிவாரணம் நிறுத்தம்

கிளிநொச்சி, டிச.14

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வந்த சுமார் 200 குடும்பங்களைச் சேர்ந்த அகதிகளுக்கு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது. அதே வேளை முகாமுக்கு வெளியே கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் சுமார் 600 குடும்பங்களுக்குரிய நிவாரணமும் நிறுத்தப்படலாம் என அஞ்சப்படுகிறது.

அகதி முகாம்களுக்கு வெளியே இருக்கும் அகதிகளுக்குரிய நிவாரணங்களை மூன்று வார முன்னறிவித்தலுடன் நிறுத்துமாறும் அவர்கள் அனைவரையும் அவர்களின் சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்புமாறும் மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தது.

இதனை அடுத்து அகதிகள் சம்பந்தமாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதன் மேலிடத்துடன் தொடர்பு கொண்டுள்ளார்.

கிளிநொச்சி அரச அதிபர் மேலிடங்களுடன் தொடர்பு கொண்டு இம்மாவட்டத்தில் தற்போதுள்ள நான்குமுகாம்களில் 350குடும்பங்களைச் சேர்ந்த 1600 பேரும் முகாமிற்கு வெளியே 600 குடும்பங்களைச் சேர்ந்த 3200 பேரும் அகதிகளாக உள்ளனர் என்று தெரிவித்தார்.

இவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப அச்சம் கொண்டுள்ளனர். இதே வேளை தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கு இலவச பிரயாண வசதிகளுடன், தங்கள் வீடுகளைத் திருத்த நிதி உதவியும் ஒருமாதகாலத்திற்கு உணவு வசதியும் அதிலுகளுக்கு உரிய நிவாரணமும் கேட்டுள்ளனர்.

### சமய நிதிகளில்

நல்லூர், டிச. 14

நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில் தேர்த் திருப்பணி வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஐந்து லட்சம் ரூபா செலவில் 26 அடி உயரமான புதிய சித்திரத் தேர் அமைக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணக்கட்டைத் தமிழ் மன்னன் சங்கிலியன் வரை இந்த ஆலயம் புகழ் பெற்று விளங்கியது. 17 ஆம் நூற்றாண்டின் பின்னர் அந்நியர் ஆட்சியின் பொழுது இந்த ஆலயம் பொலிவிழந்தது.

பெரியார்கள், அடியார்களின் அயரா முயற்சியினால் மீண்டும் புதுப் பொலிவு பெற்று விளங்கும் இந்த ஆலயத்துக்கு சித்திரத் தேர் ஒன்று அவசியம் என்பது உணரப் பட்டது.

அதன் பயனாகவே, அரச சட்டத்தரணி திரு. எஸ். கனகரத்தினம் தலைமையில் உருவாகியது தேர்த்திருப்பணிச்சபை.

திருநெல்வேலி பிரம்ம ஸ்ரீ க. செல்வராஜா ஆச்சாரியார் தலைமையில் புதிய சித்திரத் தேர் உருவாக்கப்பட்டு வருகின்றது. தேருக்கான பலகைக்கால் நடும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

### வித்தாரம்

தம்பி முரளியே, வந்திட்டாயாக்கும். வா, வா!

நேற்றைக்கு உன்னைச் சந்திக்க முடியல்லே. வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பட்டினம் பெரிய ரகளைப்பட்டிட்டுது. எண்டாலும் நான் அதாலை தான் உன்னிட்டை வரயில்லைஎண்டு நினைக்காதை.

காலையிலையே பெரிய சனக்கூட்டம். ஒவ்வொருத்தரா வந்து என்ரை நேரத்தை வீணாக்கிப் போட்டுதுகள். ஒரு விஷயமா வந்தால் சட்டுப்புட்டெண்டு அதைப் பேசி முடிச்சிட்டுப்போற பழக்கம்தான் எங்கடை சனத்திட்டை இல்லையே. மற்றவையின்ரை அலுவல் அவசியம் தெரியாமல் தங்கடை பல பிலாக்கதையளையும் அவிட்டு விட்டுக்கொண்டு பொன்னான நேரத்தை மண்ணாக்குதுகள். மற்றவன் எங்கெங்கே போக இருக்கிறானோ, என்னென்ன வேலையிருக்கோ எண்டு நினைக்கிறயில்லை.

ஒரு கந்தோரிலை இருக்கிற மனேச்சர் இதைச் சொல்லி அடிக்கடி குறைப்படுகிறவர். கூட்டம் குஞ்சடியிலை பேச எழும்பினை அலம்பி அளந்து தள்ளுறதை ஒரு மாதிரிப் பொறுத்தாலும் வேலைநேரத்திலை வந்து குழப்பினை எப்பிடி?

தங்கடை பல்லவியைக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும் எண்ட நினைப்பு. விஷயம் பேசி முடிஞ்சா அல்லது செய்து முடிஞ்சா விறுக்கெண்டு போகமாட்டினம்.

அது இருக்கட்டும்—

முந்தநாள் யாழ்ப்பாணம் கலங்கிக்கொண்டிருக்கையிக்கை எங்கே நிண்டனி.

நீ, உந்த ஐடென்ரிக் காட்டையும் கவனமா எடுத்துக்கொண்டு போறயில்லை. வாறபோற இடத்திலை இசக்குப் பிசக்கா மாட்டிக்கொண்டா என்ன செய்வாய்?

என்ன செய்யிறது! ஊர்காவற்றுறை வி. நவரத்தினத்தார் சொன்ன மாதிரி தமிழனுக்கு நாய்ப்பட்டி கட்டத்தானே உந்த ஐடென்ரிக் கார்ட் வந்தது.

கன நாளைக்குப் பிறகு எங்கடை இராமண்ணை மார் அண்டைக்கு யாழ்ப்பாணத்துக்கு வந்தவை.

அவை வந்தா எங்கடை சனம் என்ன மாதிரி தெறிகெட்டு ஓடும் எண்டு சொல்லத் தேவையில்லைத் தானே. எந்த வேகத்திலை பயந்து ஓடுங்களோ, அவை போயிட்டினம் எண்டு அறிஞ்சதும் பத்து நிமிஷத்திலை அதே வேகத்திலை திரும்பி வருங்கள்.

ஆனா, ஒண்டு. அண்டைக்கு வந்தவை விடுகளைப் போய்ப்பார்த்த போதுதேவையில்லாமல் சனத்தோடை சொறியயில்லைஎண்டு கேள்வி.

தாங்கள் வந்த வேலையை மரியாதையாய்ச் செய்து விட்டுப் போனதாகவும் சொல்லுகினம்.

அதே கதையைத் தான் கிளிநொச்சி வர்த்தகர் ஒருவரும் நேற்று வானுக்குள்ளை வைச்சுச் சொன்னார்.

உருத்திரபுரம் சம்பவத்திலை திரும்பி நடைபவனி போனபோது பூட்டியிருந்த கடையளைத் திறக்கச் சொன்னவையாம். நாங்கள் பொதுசனங்களைஒண்டும் செய்யமாட்டோம்.நீங்கள் பயப்பிடத் தேவையில்லை 'பெடியளை'த் தான் நாங்கள் தேடுகிறம் எண்டும் சொன்னவையாம்.

புதுவிசமான ரோந்து தேடுதல் எண்டு கொழும்பு மாநாட்டிலை முடிவு செய்தவையோ யல்லே. அதின்ரை விளைவுதான் இந்தப் புதிய போக்கு எண்டு தான் நான் நினைச்சன்.

உங்கள் கோண்டாவில்

எங்கள் புதிய வெளியீடுகள்:
குற்றவாளிகள் நாம் நேர்மை
கராத்தே ராஜா
(Thomsun Original Copies)
உங்கள் ஓடர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T'Phone: 23665

# உதயன்

14 - 12 - 1985

எங்கள் புதிய வெளியீடுகள்:
தண்டனை, அமுதகானம்
திருமலைத் தென்றல்
(Pyramdi Original Copies)
வேட்டைக்காரன் பாசவலை
மரகதம்
(V.G.P. Original Copy)
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T' Phone: 23665

# ஏழு அரச கட்டடங்கள் குண்டு வைத்து தகர்ப்பு

## மட்டக்களப்பு ஆயித்தியமலைப் பகுதியில்

மட்டக்களப்பு, டிச. 14
மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயித்தியமலைப் பகுதியில் 7 அரசாங்கக் கட்டடங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

இனந் தெரியாத நபர்கள் குண்டு வைத்ததாகக் கூறப்படுகின்றது.

ஆயித்தியமலைப் பகுதியில் உள்ள—
1. கமநலச் சேவை நிலையம்
2. கலாசார மண்டபம்.
3. கிராம முன்னேற்றச் சங்க மண்டபம்
4. கரடியனறு விவசாயப் பண்ணையிலுள்ள இரண்டு கட்டடங்கள்.
மற்றும் இரண்டு அரச கட்டடங்கள்.

## கடத்தல்

யாழ்ப்பாணம், டிச. 14
கல்முனை தொலைத் தொடர்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான லொறி ஒன்று பெருந் தொகையான தொலைத் தொடர்பு உபகரணங்களுடன் புல்லுமலைக்கு அண்மையில் வைத்து நேற்று மாலை கடத்தப்பட்டது.

லொறியில் இருந்த உபகரணங்கள் புல்லுமலை இராணுவ முகாமுக்கு தொலைத் தொடர்பு இணைப்புக்களை ஏற்படுத்துவதற்காகக் கொண்டு செல்லப்பட்டவையென்று கூறப்படுகிறது.

## ஹர்த்தால் நடத்த முயற்சி

அம்பாறை, டிச 14
சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தை ஆட்சேபித்து ஹர்த்தால் ஒன்றை நடத்த முஸ்லிம் இயக்கங்கள் ஏற்பாடு செய்கின்றன.

தொழில் நுட்பக் கல்லூரியில் 10 லட்சம் ரூபா பெறுமதியான தட்டச்சு இயந்திரங்கள், தொழில் நுட்ப உபகரணங்கள் சில தினங்களுக்கு முன்னர் கொள்ளை அடிக்கப்பட்டிருந்தன.

முஸ்லீம்களின் கல்வி, சமூக முன்னேற்றத்துக்கு இந்தக் கொள்ளை முட்டுக்கட்டையாக இருப்பதாகக் கூறியே இந்த ஹர்த்தால் ஒழுங்கு செய்யப்படுகின்றது.

## பீதியால்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மரண விசாரணையில் பின்வரும் தகவல்கள் தெரியவந்தன.

சம்பவ தினம் தாயும் மகளும் யாழ். ஆஸ்பத்திரிக்கு மருந்து எடுக்க வந்தனர்.

குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டபோது பயந்து ஓடிய சமயம் எதிரே வந்த மினிவான் ஒன்று இவர்களை மோதியது.

மகளின் கழுத்தில் சில்லு ஏறியது. மகள் மரணமானார். காயமடைந்த தாயாருக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்பட்டது.

மரண விசாரணையின் பின் விபத்து மரணம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## 1983 கலவரம்

# தந்தை - மகன் கொலை வழக்கில் எதிரிகள் விடுதலை

திருகோணமலை, டிச. 14
1983 ஜூன் கலவரத்தில் தந்தையையும் மகனையும் பட்டப்பகலில் வெட்டிக் கொலை செய்தனர் என்று குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் ஐந்து எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டனர்.

ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர் எஸ். ஆழ்வாப்பிள்ளையும் அவரது மகன் ரமணீகரனுமே இப்படிப் பயங்கரமாகக் கொல்லப்பட்டவர்கள்.

27-6-1983இல் இக் கொலைகள் இடம்பெற்றன.

தந்தையும் மகனும் நண்பகல் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோதே, ஆயுதம் தாங்கிய ஒரு கூட்டம் வீட்டுக்குள் புகுந்து காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியது.

இப்படி வழக்கு விசாரணையில் தகவல் வெளியானது.

விசாரணை முடிவில் திருகோணமலை நீதிவான் ஹேமால் சேனரத்ன 5 எதிரிகளையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். வெள்ளிக்கிழமை (13-12-85) தீர்ப்பு வழங்கப்பட்டது.

வழக்கு விசாரணை நடைபெற்ற சமயத்திலே எதிரிகள் அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். எதிரிகளின் பெயர்கள் வருமாறு:—

கே.பி லன்றிஸ்சில்வா, ஏ. எம். ஹேமந்தா, ஏ. ரஞ்சித், ஏ பி. ஜெயலத், எல். கலபதி.

## ரூபவாஹினி

(14 - 12 - 1985)

மாலை
5.00 - செய்திகள்
5.15 - சம்மரின் - சார்ட் டிவ தொடர்
5.10 - உங்கள் உடலைப் பற்றி
5.30 - உலக விளையாட்டு
6.30 - செய்திகள் (தமிழ்)
7.00 - குரங்குகளின் கிரகம் (ஆங்கிலம்)
8.00 - செய்திகள் (சிங்களம)
8.25 - யசோரவாய (டெலிடிராமா)
9.00 - செய்திகள் (ஆங்கிலம்)
9.25 - பார்வையாளர் கேள்வி
9.50 - மக்கிமெய்ன்ஸ் லோ (துப்பறியும் தொடர்
10.40 - ஒளிபரப்பு முடிவு

# காத்தான்குடி வங்கிக் கொள்ளை நகைகளுக்கு நஷ்டஈடு

மட்டக்களப்பு, டிச.14
காத்தான்குடி மக்கள் வங்கிக் கொள்ளையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடாக பணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான உத்தரவை மக்கள் வங்கித் தலைமைப் பீடம் மக்கள் வங்கிப் பிராந்திய முகாமையாளருக்கு அனுப்பி வைத்துள்ளது.

13-1-1984இல் மக்கள் வங்கியின் காத்தான்குடிக் கிளை கொள்ளை அடிக்கப்பட்டது.

மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியான நகைகள் அச்சமயம் கொள்ளை இடப்பட்டன. 5,700 வாடிக்கையாளர்கள் அடகு வைத்த நகைகளே அவையாகும்.

நகைகளைப் பறிகொடுத்த வாடிக்கையாளருக்கு ஒரு பவுணுக்கு 2,800 ரூபா அடிப்படையில் இப்பொழுது நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

அடகு வைத்த நகைகளுக்கான முதலும் வட்டியும் கொள்ளை நடந்த தினம் வரை கணக்கிடப்படும் என்றும்—

நஷ்டஈடு பணம் முழுவதும் ஓரே கட்டத்தில் வழங்கப்படும் என்றும் வங்கி மேலிடம் அறிவித்து உள்ளது.

இத் தகவல்களை மக்கள் வங்கி மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் திரு. கே. சுப்பிரமணியம் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இரண்டு வாரங்களுக்குள் நஷ்டஈட்டுப் பணம் வழங்கப்படும் என்றும் திரு சுப்பிரமணியம் சொன்னார்.

# மூதூர் தேடுதலில் 6 தமிழ்ப் பெண்கள் மானபங்கம்

திருகோணமலை, டிச. 14
மூதூர் பகுதியில் செவ்வாய், புதன் கிழமைகளில் நடைபெற்ற தேடுதலின்போது 6 தமிழ்ப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர் என்று சொல்லப்படுகிறது. இரண்டு தமிழர்கள் துப்பாக்கிக்குண்டுகள் தாக்கி மரணமானார்கள்.

இது பற்றிய விபரம் வருமாறு:—

மானபங்கத்துக்கு ஆளானதாகச் சொல்லப்படும் பெண்களில் இரண்டு பேர் ஆலங்கேணி வாசிகள்.

4 பேர் பட்டித்திடல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆலங்கேணியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது மரணமான இரண்டு தமிழர்களின் பெயர்கள் வருமாறு:—

என். தர்மலிங்கம் (வயது 35), என். சோமசுந்தரம் (வயது 35).

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் மரண விசாரணை நடத்தப்பட்டது. பின்னர் சீருடையினரால் சடலங்கள் எரிக்கப்பட்டன.

அதேவேளை ஒரு தமிழ் இளம் பெண் உட்பட இரண்டுபேரைச் சீருடையினர் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

44 வயதான சிவநந்தி, 26வயது நிரம்பிய கேதீஸ்வரி ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள்.

தமிழர்களுக்குச் சொந்தமான இரண்டு கடைகளும் எரிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்டவர்கள் திருமலை பிரஜைகள் குழுவிற்கு முறையிட்டுள்ளனர்.

## இலங்கை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் பேச்சுக்களை நடத்தி தீர்வு ஒன்றுக்கு வழி காண்பதே, இரண்டாவது ரக இராஜதந்திரம்.

இலங்கை அரசின்மீதும் சமூகங்கள் மீதும் செல்வாக்குப் பெற்ற சக்திகளை இதற்குப் பயன்படுத்தவேண்டும்.

இலங்கையில் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது

உத்தியோகப் பற்றற்ற முறையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இது தடையாக இருக்காது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின்படி,

இரண்டாம் ரக இராஜ தந்திரம் சமஷ்டி கட்சி ஒன்றைக் கொண்டு வர முயற்சிக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

இலங்கை அரசுக்கு 'சமஷ்டி' என்ற சொல் பிடிக்காத ஒன்றானபடியால், அச்சொல்லுக்குப் பதில் அதிகாரப் பரவலாக்கல் அல்லது அதற்கு இணையான சொல் ஒன்றை பயன் படுத்தலாம் என்று மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாம்ரக இராஜ தந்திரத்தை வலியுறுத்த இன்னொரு மாநாடு, அமெரிக்காவில் ஹவார்ட் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் நடைபெறும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் நகரில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தன. சகல பக்கங்களில் இருந்தும் வந்த துப்பாக்கி வேட்டுகள் காதுகளைப் பிளந்தன.

மறைந்த போராளிகளின் பூதவுடல்கள் மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு மூன்று பிரேத வண்டிகளில் வைக்கப்பட்டவண்ணம் மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக சில பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

ஆயிரக் கணக்கான மக்கள் இவர்களின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டனர்.

பின்னர் அவர்களின் பூதவுடல்கள் அவர்கள் சொந்த ஊர்களில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன. அச் சமயம் 21 மரியாதைக் குண்டுகள் தீர்க்கப்பட்டன. பலர் இரங்கல் உரை நிகழ்த்தினர். போராளிகளின் மறைவு குறித்து துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன.

கொக்குவிலைச் சேர்ந்த ரவிமூர்த்தி, அரியாலையைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன், கைதடியைச் சேர்ந்த பண்டா ஆகியோரே இறந்த போராளிகள்.

## உலகத் தமிழ்....

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

பத்திரிகை ஒன்றை வெளியிட ஆவன செய்யுமாறு கோரி மொரீசியஸ் தமிழ்க் கல்வி அதிகாரியிடம் அதற்குத் தேவையான நிதியை அன்பளிப்புச் செய்தார்கள்.

இதனால் நீண்டகாலமாக மொரீசியஸ் வாழ் தமிழ் மக்களது அபிலாஷைகள் நிறைவேற வழியேறபட்டது.

மலேசியாவிலிருந்து வெளியாகும் தமிழ் நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் முதலான ஆக்க இலக்கிய நூல்கள் இலங்கைத் தமிழ் மக்களுக்குக் கிடைப்பது மிகவும் அரிதாக இருந்தது; இப்போதும் இருக்கிறது.

இந்த நிலையில் எமது இயக்கம் பெரும்தொகையான மலேசியத் தமிழ் நூல்களை மலேசியாவிலிருந்து தருவித்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூல்நிலையத்திற்கு வழங்கியுள்ளது.

இந்தப்பணியில் எழுத்தாளர் வைத்திய கலாநிதி. கனககுமார் அவர்களும் எமக்குப் பெரும் உதவி புரிந்தார்.

## விளையாட்டரங்கு

முதலாவது டெஸ்ட்

# ஆஸி வீரர்கள் அபார ஆட்டம் இந்திய பந்துவீச்சாளர்கள் திணறல்

## சிவராமகிருஷ்ணன் அணியிலிருந்து அவுட்!

அடிலயிட், டிச. 14
இந்தியாவுக்குஎதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்கள் அபாரமாக விளையாடுகிறார்கள்.

அவர்களது துடுப்பாட்டத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் இந்திய பந்து வீச்சாளர்கள் திணறுகிறார்கள்.

இந்த டெஸ்ட் ஆட்டத்தின் முதலாம் நாள் ஆட்டம் நேற்று வெள்ளிக்கிழமை அடிலயிட்டில் ஆரம்பமானது.

ஆரம்பத்தில் பூவா, தலையா சுண்டிப் பார்த்ததில் ஆஸ்திரேலிய அணித் தலைவர் வெற்றி பெற்றார். அவர் துடுப்பாட்டத்தை தேர்ந்தெடுத்தார்.

நேற்றைய ஆட்டம் முழுவதும் ஆஸி துடுப்பாட்ட வீரர்களின் கை ஓங்கியிருந்தது. அவர்கள் திறமையாக, நிதானமாக ஆடினார்கள். அவர்களது விக்கெட்டுகளை வீழ்த்துவதற்கு இந்திய பந்து வீச்சாளர்கள் மிகவும் சிரமப்பட்டார்கள்.

நேற்றைய ஒருநாள் ஆட்டத்தில் நான்கு ஆஸி விக்கெட்டுக்களையே அவர்களினால் வீழ்த்த முடிந்தது.

ஆஸி தரப்பில் டேவிட் பூன் அபாரமாக ஆடி டெஸ்ட் ஆட்டத்தின் முதலாவது "செஞ்சுரியைப்" பெற்றுக்கொண்டமை நேற்றைய ஆட்டத்தின் சிறப்பம்சம்.

நேற்று ஆட்ட இறுதியின்போது ஆஸி அணி 4 விக்கெட் இழப்புக்கு 248 ஓட்டங்களை பெற்றிருந்தது.

வெயின் பிலிப்ஸ் 11 டேவிட் பூன் 123, ஜியோவ் மார்ஷ் 05, அலன் போர்டர் 49, கிரெக் ரிச்சி, டேவிட் குக்ஸ் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 55, 5 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்திய பந்து வீச்சாளர்கள் தரப்பில் அணித் தலைவர் கபில்தேவ் 68 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்தியாவின் சுருள் பந்து வீச்சாளரான தமிழ் வீரர் லக்ஷ்மண் சிவராமகிருஷ்ணன் இந்திய அணியின் முதல் பதினொரு வீரர்கள் பட்டியலில் இடம் பெறவில்லை என்பதும்—

அவர் பன்னிரண்டாவது (மேலதிக) வீரராகவே அணியில் இடம் பெறுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சடலங்கள் ஒப்படைப்பு

நல்லூர், டிச. 14
நேற்று முன்தினம் யாழ்நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான மானிப்பாயைச் சேர்ந்த எஸ். துரைசாமி (79வயது) அரியாலையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை (வயது 59) ஆகியோரது மரண விசாரணைகள் நேற்று நடைபெற்றன.

மானிப்பாயைச் சேர்ந்த துரைசாமியின் மரணவிசாரணையைதிடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க. கேசவன் நடத்தினார்.

அரியாலையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளையின் மரண விசாரணையை. யாழ். மரண விசாரணை அதிகாரி திரு. ஏ. அன்ரனி நடத்தினார்.

சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

## இன்று

நல்லூர், டிச. 14
கொழும்புத்துறை குருத்துவ மாணவர்களுக்கான பத்திரிகை கருத்தரங்கு ஒன்று இன்று சனிக்கிழமை நடைபெறுகிறது.

வண. பிதா டொமினியன் அடிகளார் கருத்தரங்குக்குத் தலைமை வகிப்பார்.

கருத்தரங்கில் பத்திரிகைகளுக்கு செய்தி எழுதுவது பற்றி "ஈழநாடு" திரு. ஜி. மகாதேவா, யாழ் மாவட்ட உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் திரு. எம். செல்வராசா ஆகியோர் உரையாற்றுவார்கள்.

## சூறாவளி அபாயம்

சென்னை, டிச. 14
இன்று அதிகாலை சென்னை நகரை பெரும் சூறாவளி ஒன்று தாக்கலாம்.

வானிலை அவதான நிலையங்கள் இப்படித் தெரிவிக்கின்றன.

## பல்கலைக்...

(1-ஆம் பக்கத் தொடர்)

றேன்.

இப்படி அவர் கூறினார்.

உயர் கல்வி பிரதி அமைச்சர் திரு. ஏ.ஆர். ஏ. அத்தநாயகா பதிலளிக்கையில், "பல்கலைக் கழக மாணவர் தெரிவில் 70 சதவீதமானோர் மாவட்ட ரீதியிலும் 30 சதவீதமானோர் திறமை அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுகின்றனர்," என்று சொன்னார்.

மில்க்வைற் நீலசோப்
மணத்துடனும் கூடிய எடையுடனும்
விலை குறைக்கப்பட்டு
விற்பனையாகின்றது.
விலை ரூ. 2-00 மட்டுமே.




200 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளைக் கொடுத்து ஒரு அழகிய பாடசாலை (B) பாக் பெற்றுக்கொள்ளுங்கள்.
10 மில்க்வைற் மேலுறைகளை அனுப்பி திருவெம்பாவைப் பாடல் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

★ இத்தாலி ★ பிரான்ஸ்
★ மேற்கு ஜேர்மன்
ஆகிய நாடுகளுக்கு எமது பிரதிநிதி இம்மாதம்
23.12.1985 இல் உங்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வார்.
சென்ற மாதம் எமது குழுவுக்குத் தலைமை வகித்து இத்தாலி, பிரான்ஸ். ஜெர்மன் ஆகிய நாடுகளுக்கு பாதுகாப்பாக அழைத்துச் சென்ற திருவாளர்கள் மகேந்திரன், ஜெகதாஸ் ஐயர் அவர்கள்
மீண்டும் 23 - 12 - 1985இல் அழைத்துச் செல்கிறார்கள்.
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
LIBRAS LTD
லிப்ருஸ் லிமிட்டெட்
R. G. கட்டடம்,
72, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
60, Sea Beach Road,
PETTAH,
T' Phone: 29148
மத்திய கிழக்கு நாடுகளில் (DOHA)
பொதுப் பணியாளர்கள் உடன் தேவைப்படுகின்றனர்.

அச்சிட்டு வாரும் வெளியிடுவோரும்: த-ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் வெளியீட்ட திகதி: 14-12-1985